உ

சிவமயம்



அமரர்

# திரு ஆ. வல்லிபுரம்

அவர்களின்

# நினைவஞ்சலி

22 - 6 - 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



துன்னாலை வடக்கு

உயர்குடி வேளாண்மரபு வழித் தோன்றலும்

திருமதி செல்லாச்சி அம்மையாரின்
அன்புக் கணவரும்
தண்டமிழ் ஆசானுமாகிய

**உயர்திரு ஆறுமுகம் வல்லிபுரம் அவர்களின்**

பிரிவு குறித்து
அவர்தம் குடும்பத்தினரால்
வெளியிடப்பெற்ற

# நினைவஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



உயர்குலத் தோன்றல், சைவப் பெருமகன்

# திரு. ஆறுமுகம் வல்லிபுரம் அவர்களின்

# *வாழ்க்கை வரலாறு*

★

**திதி வெண்பா**

*துகளறுசீர்த் துந்துபியில் தூயவைகாசித் திங்கள்*
*திகழுமோர் பிரதமை ஞாயிறு — தகவாளன்*
*மன்னுபுகழ் **வல்லி புர**வாசான் மாண்புமிகு*
*பொன்னுலகு சென்ருன் புகல்.*

*துன்னையம் பதியில் துலங்கு மரபாம்*
*மன்னு காராளன் மாண்பி ஞறுமுகன்*
*பொன்னின் எழிலாள் பதியவள் சின்ஞச்சி*
*என்னு மிவர்கள் இயலருந் தவத்தால்*
*பன்னரும் புதல்வர் மூவ ருளராம்*
*அண்ணர் கந்தையர் அறிவின் பெருக்கம்*
*எண்ணருஞ் சந்திர சேகரன் தம்பியாம்*
*கண்ணருந் தங்கை வள்ளிப் பிள்ளையொடு*
*அண்ணல் "வல்லிபுரன்" அவதரித்தனன்*
*உற்ற சோபகிருது ஆனி யாறில்*
*சுற்றம் வாழ உற்றவர் மகிழப்*
*பெற்றனர் அவனைப் பெருஞ் செல்வமாக*
*அன்னவன் தானும்;*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருங்கலை மதிய மென்ன வளர்ந்து
ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கிலங் கற்று
ஈட்டிய பயிற்சித் தமிழா சிரியனாய்
நீட்டியே கோப்பா யீந்ததோ ராசான்
நாட்டின் நெறியில் நல்லறம் நாடி
தேட்டத் திருவாம் நாகலிங்கம் மகள்
ஈட்டும் இல்லாள் இணைந்த செல்லாச்சி
நாட்டமாய் வாழ்ந்து நல்லறம் பெருக்கி
செல்வ மகளோ ரிலட்சுமி யம்மாள்
செல்வ மகனோராறு முகப் பேரான்
செல்வ முகத்தான் காராள சிங்கன்
திருவளர் செல்வி தெய்வ சோதி
தரும சிந்தையாள் திர வியத்துடன்
செல்வச் சிறுமகள் தெய்வநாயகி யெனும்
செல்வச் சேய்கள் சீருடன் பெற்று
செல்வம் சேர்த்துச் சீராள ராக்கி
முன்னவள் நல்ல குருவாய் விளங்க
பின்னவ னுயர் பேராசிரியனாக
இன்னு மிளையன் தபாலதி பனாக
பின்னவ ரிருவர் இல்ல விளக்காய்
பின்ன வளுங் குருவாகிப் பெருநலம்
பின்னிப் பிணைந்து அன்பு பெருக
பொன்னும் பொருளும் மன்னிய மனையும்
உன்னி யுழைத்து உயர்தந்தை யாகித்
துன்னு மருமக்க ளன்புடன் பேண
எண்ணரும் மாமன் என்று தாங்காண
ஏந்தல் கனக சபாபதி யாசான்
எழிலார் நங்கை செல்வ ராணி
தயவு நிறைந்த தர்மேஸ் வரியுடன்
அருமை மருமகன் மகாதே வன்தானும்
ஆயித்தர் எனும் உயர் திருமகனும்
சந்திரனொருசீர் பெறு மகனும்
உன்மனைப் பொருளாய் உறுதிகொள் வாழ்வு
நன்மனைக் கண்டாய் நலமெலாம் ஓங்கி
உன்மனை கல்விக் குறை விடமாகி
அறிவுச் சுடரை விரித்து ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் பலகண்டு சேவை புரிந்தாய்
ஓங்கிடும் ஞானசாரியக் கல்லூரி யைத்
தாங்கியே வளர்த்த தாபகக் குழுவில்
அங்கம் வகித்து அரும்பணி புரிந்து
எங்குமே கல்வியின் இன்னொளி பரப்பி
மங்கிடாப் புகழை மாண்புறப் பெற்றனை
ஊரார்க்குச் சேவை உற்றார்க் கருவிருந்து
வீட்டார்க்குத் தந்தை வந்தார்க்கு நன்னிழலாம்
தேரார்க் குறுதிமொழி தெளிந்தார்க் கொருதோழன்
யாரார்க்கிவ் வரலாறு யாத்துநீ சொன்னுயோ!

## மக்கள் அதிர்ச்சி

ஆரார்க்கு மேதுவகை அன்புடனே ஆதரித்தாய்
ஒய்வான காலத்தும் ஓயாது உழைத்தாய் நீ
ஆய்வுள்ள பிஞ்சுகளைப் பேரராய்ப் பெற்ருய் நீ
ஆறு பேரன்சூழ ஆடி விளையாட
நாலுபேர் பேத்தியராய் நன்னிக் குதித்தாட
சீரால் குறைவுபடாச் செம்மலெந் தந்தையரே
ஆருக்கும் சொல்லாமற் சென்றவழி அறியோமே
வாத்தியா ரெங்கென்ருல் வார்த்தை நாமேதுசொல
ராத்திரியில் காவல் யார்பப்பா? இங்கிருப்பார்
நேத்திரங்கள் நீரவிழ நம்மைவிட்டு நீங்கியதேன்
கோத்திரத்துக் கோர் விளக்கே கொதிக்குதெங்கள்
குருதியெலாம்

## மனையாள் பிரிவுரைத்தாள்

பிரியா மனத்தோடு பீடுமனை வாழ்ந்தவரே
நெரியா மனத்தோடு நேர் பாதை சென்றீரோ
தரியா மனத்தோடு தங்க வைத்துச் சென்றீரே
எரியா மனமோ நான் எரிந்தெரிந்து சாம்புகிறேன்.

## மருமக்கள்

உங்களொளி யிங்கே யுறைந்து அவிந்ததென்ன
உங்களழைப்பாலே யுள்ள மெலாந் தானுவக்கும்
எங்களுறையுளுள் ஓரங்க முதிர்ந்த தென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கம் பொலிந்தமுகம் தங்குமென்று ஏமாந்தோம்
எங்கள் இன்துணையை ஈந்த உத்தமரே!
மங்கல நாளினிலே மலரவைத்தா வெம்மனதை
திங்கள் முகங்காட்டித் தம்மக்க ளாய்மதித்து
எங்களை யாதரித்த இன்மொழியே மாமாநீ.

## பேரர்

அம்மப்பா அப்பப்பா என்றப்பா நாமழைத்து
எம்மப்பா நாமோடி விளையாட வருவீரோ
எங்கப்பா சாஞ்சாடிக் கதைசொல்ல வாராயோ
எங்கப்பா ஏனப்பா எம்மப்பா வாங்கோவன்.

## பழைய மாணவர்

சிரித்த ஞானம் செம்மை சேர்வதனம்
நேரித்த நோக்கம் நல்லேற்று நடை
பூரித்த வாக்கும் பொருளாலுயர் பேச்சும்
ஆதரித்துப் பூத்ததோ தான்.
சொல்லால் செயலால் சோர்வில்லா ஆர்வத்தால்
நல்லோ ரிணக்கத்தால் ஞானத்தால் சேவையால்
எல்லோரி தயத்து மூறிஞய் எங்குருவே
பல்லோரும் பணிகின்றோம் நாம்.

## தேற்றம்

இறந்தவர்க் கிரங்கலும் பிறந்தவர்க் குவத்தலும்
மறந்தரு மரபினர் மாண்பன் றென்று
அறந்தரு நூலினர் ஊன்றி யுரைத்தலால்
சிறந்தநற் கிரியையில் சாந்தி யெய்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## சம்பந்தர் தேவாரம்

முந்தி நின்ற வினைகளவை போகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூ
ரந்த மில்லா வடிகளவை போலுங்
கந்த மல்கு கமழ் புன்சடையாரே.

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மை யினுந் துணையைந் தெழுத்துமே.

## நாவுக்கரசர் தேவாரம்

சுற்றமுந் துணை நன்மட வாளொடு
பெற்ற மக்களும் பேண லொழிந்தனர்
குற்றமில் புகழ்க் கொண்டீச் சரவனார்
பற்றலா லொரு பற்று மற்றில்லையே.

ஐயினான் மிடறடைப் புண்டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடு
மையனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதங்
கையினாற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் தேவாரம்

நீறூர் மேனியனே! நிமலா நினையன்றி மற்றுக்
கூறேனுவதனுற் கொழுந்தே! யென்குணக்கடலே
பாரூர் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியா
யேறேயுன்னை யல்லா லினியேத்த மாட்டேனே.

அந்தணாள னுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றனுரு யிரதனை வவ்விஞய்க்
குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன்மற் றென்டியா யென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப்புன் கூருளானே.

## திருத்தாண்டகம்

தினைத்தனை யோர் பொறையிலா வுயிர்
போங் கூட்டைப் பொருளென்று
மிகவுன்னி மதியா விந்த
வனைத்துலகு மாளலா மென்று பேசுமாங்கா
ரந்தவிர் நெஞ்சே யமரர்க்காக,
முனைத்து வரு மதில்மூன்றும் யொன்றவன்று
முடுகிய வெஞ்சிலை வளைத்துச் செந்தீமூழ்க
நினைத்த பெருங் கருணையன் னெய்த்தானமென்று
நினையுமா நினைந்தக் காலுய்யலாமே.

## திருவாசகம்

காணலாம் பரமே கட்கிறந்த தோர்
வாணிலாப் பொருளே யிங்கோர் பார்ப்பெனப்
பாணனேன் படிற்றுக் கையை விட்டுனைப்
பூணுமா றறியேன் புலன் போற்றியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறலறிலை செய்வதொன்
றறியேனே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி–யீசற்காட்செய்மின்
குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருவிசைப்பா

இடர்கொடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்கும்
தூயநற் சோதியிற் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன்
வாயில்மட்டே
இனமான சுற்றம் மயான மட்டேவழிக் கேதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவம்
தனையான வென்றும் பரலோகஞ் சித்திக்கும்
சத்தியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகிறோம்

மறைந்த எம்மன்பிற்குரிய எனது கணவர்/எமது தந்தை இறைபதம் அடைந்த போது அன்னாரது மரணச் சடங்குகளிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து கொண்டு பல உதவிகளையும் மனமுவந்து அளித்த எமது சுற்றத்தவர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மனைவி, மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org